எனவே இனிமேல் உறுப்பினர்கள் குற்றச்சாட்டுகளைக் கூறும் போது அவைகள் அமைச்சர்களது அலுவல் பற்றியதாக இருந்தால் கூறுவதில் தவறில்லை. ஆனால் அவ்வாறான குற்றச்சாட்டுகள் அல்லது தவறுகள் அமைச்சர்களுக்குத் தெரிந்துதான் செய்யப் பட்டது என்று ஆதாரம் இன்றி கூறுவது சரியாகாது. அம் மாதிரியே அமைச்சர்களும் ஏதேனும் ஒரு விசாரணையின் விளைவாக அதில் உறுப்பினர்கள் சம்பந்தப்பட்டிருந்தால் அதைத் தீர விசாரிக்காது அவைக்குக் கொடுப்பதும் சரியாகாது.

இப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் உறுப்பினர் எழுப்பி யுள்ளது போன்று எந்தவிதத்திலும் மேலெழுந்தவாரியாகக் கூட உரிமை மீறல் இல்லை என்று எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

அரசு விசாரணைக்குப் பின் அவைக்கு அதன் முடிவுகளையும் அறிவிக்க வேண்டும்.

4. அறிவிப்பு.

மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன் வடிவுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 4—4—1978 ஆம் நாளன்று கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித் துள்ளதாக மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களிட மிருந்து செய்திகள் வரப்பெற்றுள்ளன:

1. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவை களை வசூலித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/78)

2. தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/78).

3. தமிழ்நாடு. 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/78).